**<u>O.S.No. 120/2018</u>**

**<u>DW1 :</u>** <u>வெங்கடேசன்</u> தேதி 30.10.2025

<u>பிவாசா 1 சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு, வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

என் வயது 59 என்றால் சரிதான். 16.4.1964 ல் வாதியை தத்து எடுத்த விசயம் நான் பிறக்காத காரணத்தினால் நேரடியாக தெரியாது என்றால் சரிதான். கேள்விபட்டு தான் தெரியும். எந்த வயதில் கேள்விபட்டேன் என்றால் எனக்கு 14 வயதாக இருக்கும் போது மேற்படி விவரத்தை கேள்விபட்டு தெரிந்து கொண்டேன். வாசாஆ 1 தானசெட்டில்மெண்ட் ஆவணத்திற்கு முன்பு எண்.15, காந்தி நகர் , ஈரோடு என்ற முகவரில் நான் வசித்து வந்ததற்கான ஆவணம் ஏதாவது உள்ளதா என்றால் ஆதார் அட்டை தாக்கல் செய்துள்ளேன். மேற்படி ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. தானசெட்டில்மெண்ட்டிற்கு முன்பு ராஜம்மாள் என்னை வளர்ப்பு மகனாக வளர்த்தற்கான ஆவணம் எதுவும் எண்.15, காந்தி நகர் , ஈரோட்டில் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் எந்த பள்ளியில் படித்தேன் என்றால் கோவை ராமகிருஷ்ணா வித்யாலயாவில் படித்தேன். ஈரோட்டில் எண்.15, காந்தி நகர் , ஈரோடு என்ற முகவரியில் நான் பள்ளி மற்றும் கல்லூரிக்கு சென்றதாக ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் எண்.15, காந்தி நகர் , ஈரோடு பழைய எண் 31 என்று இருந்தது. அந்த 31, காந்தி நகர் , ஈரோடு முகவரியில் தான் நான் இருந்தேன். கதவு எண்.31 க்கு முன்பாக கதவு எண்.27 என்று இருந்ததா என்றால் ஆம் இருந்தது. மேற்படி கதவு எண் 27 மாற்றமாகி கதவு எண்.31 பின்னிட்டு மாற்றமாகி கதவு எண்.15 ஆகவும் இருந்த காலகட்டத்தில் நான், ராஜம்மாள் மற்றும் ஓ.கே.நாச்சிமுத்துமுதலியாரின் வளர்ப்பு மகனாக இருந்தேன் என்பதற்கான ஆவணம் ஏதாவது தாக்கல் செய்திருக்கிறேனா என்றால்

தாக்கல் செய்திருக்கிறேன். வாசாஆ 1 ஆவணத்தில் தானசெட்டில்மெண்ட் பத்திரத்தில் நான் 6 மாத குழந்தையாக இருக்கும் போதே நான் ராஜம்மாள் மற்றும் ஓ.கே.நாச்சிமுத்துமுதலியாரின் வளர்ப்பு மகனாக இருந்ததாக வாசகங்கள் கண்டுள்ளது உண்மையா என்றால் உண்மை தான். அதன் பின்னிட்டு நான் வாசாஆ 1 கண்டுள்ள முகவரியில் வளர்ந்ததற்கான ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் குடும்ப அட்டை ,ஆதார் அட்டை ஆகியவற்றை தாக்கல் செய்திருக்கிறேன். அவ்வாறு ஆவணம் எதுவும் மேற்படி முகவரியில் குடியிருந்ததாக ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. ராஜம்மாளின் 87 வயதை பயன்படுத்தி வாசாஆ 1 பொய்யான ஆவணத்தை தயாரித்து கொண்டேன் என்றால் சரியல்ல. ஓ.ஏ.கே.நாச்சிமுத்துமுதலியாரின் புகைப்படத்தை காட்டினால் அடையாளம் காண முடியுமா என்றால் காட்ட முடியும்.என்னிடம் காண்பிக்கப்படும் புகைப்படத்தில் நின்று கொண்டிருக்கும் மற்றும் அட்சதை தூவும் நபர் ஓ.ஏ.கே நாச்சிமுத்துமுதலியார் தான். மேற்படி புகைபடங்கள் (எண்ணிக்கை 2) **வாசாஆ 5**. அந்த புகைபடத்தில் உள்ள மணமக்கள் சாவித்திரி மற்றும் அவரது கணவர். சாவித்திரிக்கு பெரியப்பா என்ற முறையில் ஓ.ஏ.கே.நாச்சிமுத்துமுதலியார் அட்சதை தூவுகிறார். என்னிடம் காண்பிக்கப்படும் புகைபடத்தில் உள்ள மாலையிடும் பெண்மணி சாவித்திரியின் பெரியம்மா ராஜம்மாள். அது **வாசாஆ 6**. என்னிடம் காண்பிக்கப்படும் புகைபடத்தில் உள்ள மாலையிட்ட சிறுமி சாவித்திரியின் மகள் ரம்யாவின் பூப்பு நீராட்டு விழாவின் போது எடுக்கப்பட்டது என்றால் சரிதான். அது **வாசாஆ 7.** வாசாஆ 6 மற்றும் 7 ல் சொல்லப்படும் நிகழ்வுகள் எண்.27 காந்தி நகர் முகவரியில் நடைபெற்றது என்றால் சரியல்ல. வாசாஆ 4 ஆவணத்தில் 4.2.1976 ல் வாதி சாவித்திரியின் திருமணம் நாச்சிமுத்துமுதலியார் வீட்டில் கதவு எண்.27, காந்தி நகர் , ஈரோடு நடந்ததற்கான திருமண பத்திரிக்கை என்று சொன்னால் சரியல்ல.

சாவித்திரியின் திருமணத்தின் போது என்னுடைய வயது 12. சாவித்திரியின் திருமணம் போது நான் கோவை ராமகிருஷ்ணாவில் படித்து கொண்டிருந்தேன். அதனால் சாவித்திரியின் திருமணம் எங்கு நடந்தது என் பெற்றோர் கலந்து கொண்டார்களா என்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் தெரியும் ஆனால் நான் கலந்து கொள்ளவில்லை ஆனால் அந்த முகவரியில் சாவித்திரியின் திருமணம் நடக்கவில்லை என்று சொல்கிறேன். என் பெற்றோர் எண்.27, காந்தி நகர் , ஈரோடு முகவரியில் சாவித்திரி திருமணத்தில் கலந்து கொண்டார்கள் என்றால் சரியல்ல. என் அம்மா இருக்கிறார். என் அப்பா இறந்து விட்டார். என் அம்மாவை நான் விசாரிக்க வேண்டிய அவசியம் இல்லை. என் அம்மாவை விசாரித்தால் உண்மை தெரிந்து விடும் என்ற காரணத்தினால் அவரை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல.

**( குறுக்கு விசாரணை நிறுத்தி வைக்கப்படுகிறது)**